## தலைப்பு 255 – கொழும்பு மாவட்ட செயலகம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூலை 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்ததாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 ஆம் ஆண்டின் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 8,777,578,248 ஆன நிதியல்லாத சொத்துக்களின் கூட்டுப் பெறுமானம் 2022 ஜனவரி 01 உள்ளவாறு ஆரம்ப மீதியாக கொண்டு வருவதற்கு பதிலாக அத்திகதியில் பதிவு செய்திருந்த ஆரம்ப மீதி 4,452,639,832 ஆக இருந்தமையால் ரூபா 4,324,938,416 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது | இது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந்து ஆலோசனைகளின் பேரில் சீராக்கி எதிர்காலத்தில் பராமரித்து செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆரம்ப மீதிகளை சரியாக முன் கொண்டு வரப்பட வேண்டும் ஆரம்ப மீதிக்கு சீராக்கம் செய்தால் அதன் சீராக்கம் தெளிவாக இனங் காணக் கூடிய வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ii) | மாவட்ட செயலகத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான கூற்றில் 2022 ஜனவரி 01 உள்ளவாறு நடைமுறை வேலையாக ரூபா 5,807,786,770 மற்றும் அதற்காக மீளாய்வாண்டில் சேர்க்கப்பட்ட ரூபா 61,094,600 மற்றும் அகற்றல்களாக நிர்வாக செயலக தொகுதி கட்டிடத்திற்குரிய பெறுமதி ரூபா 4,385,958,383 தொகை சீராக்கப்பட்டிருந்தது. இந்த அகற்றல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் நடைமுறை வேலையாக தொடர்ந்து நிதிக்கூற்றுகளில் 1,482,923,047 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதும் நடைமுறை வேலை தொடர்பான விரிவான அட்டவணையொன்று | அலுவலக செயலக தொகுதி கொழும்பு மாவட்ட செயலத்தின் பொறுப்பில் காணப்படும் அரசாங்கத்திற்கு சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அது அரசின் காணி அமைச்சின் உட்பட்ட விதம் தொடர்பாக சட்ட ஏற்பாடுகள் இல்லை எனவும் அமைச்சு காலத்திற்கு காலம் ஸ்தாபிக்கப்படும் அரச நிறுவனம் ஒன்றாக இருப்பதால் அவ்வாறான நிறுவனங்களில் | காணியின் உரித்து மாவட்ட செயலாளர் கணக்கின் கீழும் கட்டிடத்தின் உரித்து உள்நாட்டு அலுவல்கள் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் கீழும் காணப்படுதல் சர்ச்சைக்குரிய நிலைமை ஒன்றாக இருப்பதால் கணக்குகளில் குறிப்பொன்று |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை மேலும் இந்த அலுவலக கட்டிடத்திற்குரிய பெறுமதி கணக்கு புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்ட போதும் கட்டிடங்களில் அமைந்துள்ள காணியின் பெறுமதி தொடர்ந்தும் இந்த அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | அசையாத ஆதனங்களில் பொறுப்பு வேறுபடல் தொடர்பாக சட்ட நிலைமை தெளிவுபடுத்திருந்ததால் மாவட்ட செயலகத்தின் பொறுப்பில் இக்காணியின் பெறுமதி உள்ளடக்கப்பட்டுள்ளதாக | மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும் |
| (iii) | நிதி அல்லாத சொத்துக்களை பரீட்சிக்கும் போது உரித்து பிரதேச செயலகத்திற்கு சொந்தமான மதிப்பீடு செய்யப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றுக்கு உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்களும் மதிப்பீடு செய்யப்படாமையால் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. மொறட்டுவ மற்றும் பாதுக்க பிரதேச செயலகத்திற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட 08 நில செவன அலுவலங்களும் பாதுக்க பிரதேச செயலகத்திற்குரிய மதிப்பீடு செய்யப்படாத 03 கட்டிடங்களும் அவதானிக்கப்பட்டன. | சிகாஸ் முறைமைக்கு உள்ளடக்கப்படாத சிகாஸ் மிக உள்ளடக்கப்படாத போறுபான சேவை இல்ல அலுவலகம் மற்றும் ரூபா 7,500,000 காணியின் மதிப்பீட்டு பெறுமதி மற்றும் பாதுக்க பிரதேச செயலகத்திற்குரிய 07 நில செவன அலுவலங்களின் பெறுமதி ரூபா 12,467,993 தொகை என்பவற்றை சிகாஸ் நிகழ்ச்சிகளுக்கு உட்படுத்துவதாகவும் மதிப்பீடு செய்யப்படாத கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | நிதியல்லாத சொத்துக்கள் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர் களின் முற்பண ''பீ'' கணக்கின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி மாவட்ட செயலக புத்தகத்தின் படி ரூபா 196,040,972 தொகை மற்றும் திறைசேரி பத்தகத்தின் படி ரூபா 197,181,641 ஆக இருந்தன. 2013 வருடம் முதல் இற்றை வரை 9 வருடங்கள் காலம் கழிந்திருந்த போதிலும் தீர்க்கப்படாத ரூபா 1,150,694 ஆன இணக்கம் காணப்படாத வரவு மீதி மற்றும் 2022 ஆம் ஆண்டின் போது கையேற்கப்படாத ரூபா 10,000 | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்வதாகவும் 2014 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் ரூபா 1,197,132 ஆன இணங்காத வரவு மீதிகளில் ரூபா 46,438 இற்குரிய விடய பொறுப்பு உத்தியோகத்தர் களிடருந்து அறவிடப்பட்டதன் பின்னர் 1,150,693 தொகை மேலும் இனங்காத வரவு மீதி ஒன்று கணக்குகளில் உள்ளதாகவும் இந்த இணங்காத வரவு மீதிகளை தேடிப் பார்ப்பதற்கு போதிய ஆவணங்களும் | திறைசேரி புத்தகங்கள் மற்றும் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் வேறுபாட்டுக்குரிய இணக்கம் செய்யப்படாத மீதியை விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆன கடன் மீதி மற்றும் குறைத்துக் கையேற்ற ரூபா 25 ஆன கடன் மீதியே இதற்குக் காரணமாகும். | அறிக்கைகளும் இல்லை என்பதாக |

**(இ) வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி கூற்றின் பிரகாரம் (SA – 30) வைப்புக் கணக்கின் மீதி ரூபா 453,883,095 ஆக இருந்தாலும், மாவட்ட செயலக புத்தகப் படி அம்மீதி ரூபா 463,883,095 ஆன இருந்தமையினால் ரூபா 10,000,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அவ்வேறுபாட்டிற்கு பொது வைப்புக் (பழைய) கணக்கின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,000,000 தீர்வுசெய்யப்படாத வரவு மீதி காரணமாக இருந்தது.∴ . 14 வருடங்களுக்கு மேற் பட்ட காலமொன்று கடந்திருந்த போதிலும் இவ்வறிக்கை திகதி வரை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக மேலும் தகவல்களை வெளிப்படுத்து வதற்கு முடியாதிருந்ததுடன் அதற்குரிய ஆலோசனை மற்றும் வழிகாட்டல் அடிப்படையில் தீர்வு செய்வதற்காக அரச கணக்குகள் திணைக்களத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசணைகளின் பிரகாரம் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தில் இருந்து ஆலோசனை பெற்றுக் கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | வைப்பு கணக்கு மற்றும் வரவு மீதி விரைவில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| **அவதானிப்பு** | | | | | |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| (i) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | நிறுவனமொன்றினால் பிரசைகள் சாசனத்தை செயற்படுத்தும் போது பிரசைகள் சாசனத்தை முறையாக தயாரித்தல், மேம்படுத்துதல் சேவைகளை நாளதுவரையாக்குதல் பின்தொடர் நடவடிக்கை, மதிப்பீடு மற்றும் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மொறட்டுவ, ஹோமாகம மற்றும் தஹிவள பிரதேச செயலகங்களால் பிரசைகள் சாசனத்தை தயாரித்திருந்த போதிலும் மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உத்தியோகத்தர் களுக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுமாறு ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளதா க | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ii) | உள்ளக பாதுகாப்பு உள்நாட்டு அலுவல்கள் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2020 செப்டம்பர் 18 ஆம் திகதிய 16/2020 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி | | பிரதேச செயலாளர் உதவி பிரதேச செயலாளர் மற்றும் நிர்வாகத் கிராம சேவை உத்தியோகத்தரால் பொருத்த முறையில் வேறாக ஒதுக்கப்பட்டு குறைந்தது நாலு மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு கிராம சேவையாளர் அலுவலகத்தையும் மேவுகை செய்யும் வகையில் பரிசோதனைக்கு உட்படுத்த | குறைந்தது 4 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது ஒரு தடவை அனைத்து கிராம சேவையாளர்கள் அலுவலகங்களும் செயற்திறனாக செய்யப்படும் மேவுகை வகையில் பரீட்சிப்பிற்கு உட்படுத்துவதற்கு தற்போது திட்டமிடப்பட்டு வருவதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

நடவடிக்கைகளில் எடுக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் மொறட்டுவ, திம்பிரிகஸ்யாய, தெஹிவள மற்றும் ஹோமாகம பிரதேச செயலகங்களுக்குரியதாக அவதானிக்கப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொழும்பு மாவட்ட செயலாளரினால் 2022 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய DIST.CMB/ ACC/2022 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மேலதிக படிகளைப் பெற்றுக் கொள்ளும் போது நிலையான படி ஒன்றுக்கு மேல் பெற்றுக் கொள்ளும் நலனாலிகளுக்கு ஒரு நிரந்தரப் படிக்கு பதிலாக மாத்திரம் ஒரு மேலதிகப் படி ஒன்று வழங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் மேலதிக படிகள் பெற்றுக் கொள்ளும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்த திம்பிரிகஸ்யாய பிரதெுச செயலகத்திற்குரிய படிகள் இரட்டிப்பான நலனாலிகளன் எண்ணிக்கை 446 மற்றும் அதன் பெறுமதி ரூபா 2,676,000 என அவதானிக்கப்பட்டது. | இரட்டிப்பு கொடுப்பனவுகளின் எண்ணிக்கை 426 இருப்பதாகவும் அதற்கு காரணம் காத்திருக்கும் பட்டியலில் சமுர்த்தி பெறுவோர் எண்ணிக்கை நீக்கப்பட வேண்டியுள்ள தாகவும் இதுவரை இரட்டிப்பு கொடுப்பனவு செய்யப்பட்ட நபர்களிடமிருந்து ரூபா 2,152,000 அறவிடு செய்துள்ளதாகவும் எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பட்டு வருவதாகவும் | இரட்டிப்பு கொ:டுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ள நலனாகளின் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தில் 152 வீடுகளுக்கு சூரிய பெனல் பொருத்துதல், தெரிவு செய்யப்பட்ட தொழில் இல்லாத் குடும்பங்களுக்கு 65 சுய தொழில் பயிற்சி பாடநெறிகளை நடத்துதல், 1000 நலனாளிகளுக்கு பயிற்சி வழங்குதல், 10 வாரச் சந்தைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் 2500 எண்ணிக்கையிலான விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் போன்ற ஒரு செயற்பாடேனும் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இச் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்கு 2022 ஆண்டு பூராகவும் நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது 3/2022 ஆம் இலக்க மற்றும் 2022/04/26-ஆம் திகதி தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அரச செலவினத்தை கட்டுப்படுத்து வதற்காக அவ்வப்போது வேலைகள் அல்லது பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த அனைத்து செயற்திட்டங் களையும் இடைநிறுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் மாத்திரம் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் போதும் பொருட்களின் விலை விரைவாக அதிகரித்தமை, வழங்குனர்கள் பொருட்களை வழங்குவதற்கு தவறியமை போன்ற சந்தர்ப்பங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. இதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் தவிர்க்க முடியாத நியாயமான காரணங்கள் அடிப்படையில் அதனை நிறைவேற்ற முடியாது இருந்தால் முறைப்படி திட்டத்தை திருத்தி அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹோமாகம பிரதேச செயலகத்திற்காக புதிய இரண்டு மாடி கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ஒப்பந்த நிறுவன தெரிவு செய்யப்பட்டிருந்த துடன் அதன் கேள்வி பெறுமதி ரூபா 152,753,294 ஆக இருந்தது. அதே நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட | | |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 203,270,000 ஆன பொறியியலார் மதிப்பீட்டை விட ரூபா 50,516,706 குறைவாக இருந்ததுடன் அதற்காக வழங்கப்பட்டிருந்த விளக்கங்களுக்கு பின்னர் அந்நிறுவனத்திற்காக நிர்மாணம் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை பெறுகை குழுவால் இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒரே ஆரம்ப ஒப்பந்த தொகையில் 10 வீதம் வரை செயலாற்றல் பாதுகாப்பை அதிகரித்தல் மற்றும் ஒப்பந்த காலத்திற்குள் மேற்பார்வை நடவடிக்கைகளை அண்மித்ததாக மேற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (அ) | 2017 ஜனவரி 06 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 350 நாட்கள் காலப்பகுதியில் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் 2018 பெப்ரவரி 28 வரை ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது எவ்வாறாயினும் ஒப்பந்தக்காரர் 2018 மார்ச் முதல் ஒப்பந்தத்தை கைவிட்டிருந்ததன் அடிப்படையில் 2018 ஜூலை 31 ஆந் திகதி உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்த கம்பெனிக்கு எதிராக பெறுகை வழிகாட்டி கோவையின் 8.11.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை அத்துடன் அமைச்சரவை பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் ஒப்பந்தக்காரரின் நிர்மாண செயற்பாடுகள் தொடர்பாக அண்மித்த மேற்பார்வையொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | ஹோமாகம பிரதேச செயலகத்திற்காக புதிய இரண்டு மாடி கட்டிட நிர்மாணம் தொடர்பான உடன்படிக்கை செய்யப்பட்ட நிறுவனத்துடன் உடன்படிக்கை 2018.07.31 திகதி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் பெறுகை வழிகாட்டி கோவையின் 8.11.4 இன் பிரகாரம் நடவடிக்கை நடவடிக்கை எடுப்பதற்கு உரிய வரிசை அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வும் | ஒப்பந்த ஒப்பந்தக்காரர் களுக்கு எதிராக பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்ட சந்தர்ப்பம் வரையில் மொத்த ஒப்பந்த செயற்பாடுகளின் 20 சதவீத வேலைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அதற்காக எடுத்த காலம் 430 நாட்கள் ஆகும். அதன் பிரகாரம் 70 நாட்களில் செய்யப்பட வேண்டிய வேலை பகுதிக்காக சுமார் 430 நாட்கள் | கட்டிட திணைக்களத்தி னால் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் ஆகக் கூடிய எல்லை குறிப்பிடப்பட்டு தாமத கட்டணங்கள் அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது | பரிந்துரைக்கப்பட்ட பிரகாரம் தாமத கட்டணங்களை அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்டிருந்தமை 360 நாள் தாமத காலம் இடம்பெற்றிருந்த போதும் அதற்காக தாமதக் கட்டணங்கள் கணக்கிடப்பட்டு அறுவடை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | . | |
| (இ) | நிர்மாண நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்ட கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்தல் பெறுமதி ரூபா 147,418,099 தொகையாக ஒப்பந்தம் இரண்டாவது ஒப்பந்த கம்பனிக்கு 2021 ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் 21 ஆம் திகதி வரை 365 நாள் காலப்பகுதிக்கு வழங்கப்பட்டிருந்தது. 2022 நவம்பர் 11 ஆம் திகதி வரை ஒப்பந்த காலம் இரண்டு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தக்காரர்களுக்காக வேலை ஆரம்பிப்பு முற்பணம் 22,053,602 தொகை உட்பட ரூபா 113,001,510 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வுடன் இணங்குவதாக | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கைகள் நிறைவு பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | (இ) இந்த கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இதுவரை 6 ஆண்டுகாலம் கடந்திருந்ததுடன் ஒப்பந்தக்காரருக்கு கட்டிட நிர்மாணங்களுக்காக ரூபா 120 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் இதுவரை கட்டிடம் பயன்பாட்டுக்கு எடுக்க நிலைமைக்கு நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வுடன் இணங்குவதாக | கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதம் இன்றி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.3 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 மார்ச் 16 ஆம் திகதிய 04/2022 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் நிதிப் பொறுப்புக்களை வகிக்கின்ற உத்தியோகத்தர்கள் அரச சேவைகள் பரஸ்பர பிணைபொறுப்பு சங்கத்தின் அல்லது தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து 03 மாதங்களுக்குள் முழுமையான பிணைத்தொகையை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது ஹோமாகம மற்றும் மொறட்டுவ பிரதேச செயலகங்களுக்குரிய சுற்றறிக்கை பிரகாரம் பிணை வைக்காமை, பிணை பதிவேடுகள் நாளாவது வரையாக்காமை, பிணை வைப்புகளுக்குரிய சேமிப்புக்கள் பாஸ் புத்தங்களில் வங்கி மீதிகளும் நாளதுவரையாக்காமை இடமாற்றம் பெற்றுச் சென்றமை மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு உரிய பிணைவைப்பு பாஸ் புத்தங்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் பிணைவைப்பினை பெற்றுக்கொள்வதற்கும் ஓய்வு பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் பிணை வைப்புகளை விடுவிப்பதற்கும் பிணை வைப்பு பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பிணைகளை வைப்பு செய்வதற்கும் பிணை வைப்பு பதிவேடுகளை நாளவது வரையாக்கி பேணி செல்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் கொழும்பு மாவட்ட செயலகம் தீப்பிடித்தமையால் ஏற்பட்ட சேதங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இதுவரை பொலீஸ் புலனாய்வு பூர்த்தி | இது தொடர்பாக பொலீஸ் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் திருப்திகரமான பதில் கிடைக்காததால் கோவை பிரிவில் கோவைப்படுத்து | நட்டங்கள் சேதங்கள் தொடர்பான பரிசோதனைகளை விரைவில் நடத்துவதற்கும் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கும் |

| | | |
|---|---|---|
| செய்யப்படாமல் இருந்ததுடன் அந்த சேதங்களை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் காணப்பட்டதுடன் தீயினால் ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி ரூபா 92,606,688 ஆக இருந்தது. | செல்லப்பட்டுள்ளதாகவும் இந்நட்டத்தை பதிவழிப்பதற்கு உள்ள இயலுமை தொடர்பாக ஆலோசனைகளை அரச நிதித் திணைக்களத்திடமிருந்து விசாரிக்கப்பட்டுள்ளதுடன் குற்றவாளிகளை இனங் காண்பதற்கு முன்னர் நட்டத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் தற்போது இடம்பெறும் குற்றப் புலனாய்வு நடவடிக்கைகளை அதைரியப்படுத்தும் என்பதால் பரிசோதனை நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்து குற்றவாளிகளிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கும் குறித்த சட்ட நடவடிக்கைகள் மிகவும் பொருத்தமானதென அறிவிக்கப்பட்டிருந்தது. | ஊழியர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதி பிரமாணக் கோவையின் 101 முதல் 156 பிரமாணங்களை ஏற்பாடுகளின் பிரகாரம் அதற்கு பொறுப்பானவர்களிடமிருந்து பெற்றக்கொள்வதற்கும் விபத்திற்கான சேதத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சம்பள கணிப்பீடு மாற்றல் கொடுப்பனவு, கூடுதலாக கொடுப்பனவு செய்த காரணத்தினால் ரூபா 1,514,127 தொகையும் இரட்டிப்பு ஓய்வூதியம், கூடுதலாக கொடுப்பனவு காரணமாக ரூபா 5,841,700 தொகையும் ஓய்வுபெற்றோர் மரணித்ததன் பின்னர் அது தொடர்பாக உறுதிப்படுத்தாமல் மேலும் தொடர்ந்து ஓய்வூதிய கொடுப்பினவினை செய்த காரணத்தினால் ரூபா 1,355,952 தொகையும் வாழ்க்கை செலவின கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகள் கூடுதலாக ரூபா 3,060,546 | இக் கூடுதலான கொடுப்பனவுகளில் அனேகமானவற்றை மாதாந்த ஓய்வூதியத்திலிருந்து மீண்டும் அறவிடப்பட்டு வருவதாகவும் அவ்வாறு கூடுதலாக கொடுப்பனவுஅறிக்கை இடப்பட்டமைக்கான காரணங்கள் இனங்கானப்பட்டு அவற்றை தவிர்ப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் | ஓய்வூதியம் சரியாகவும் முறையாகவும் தயாரிக்கப்பட்டு அவற்றை பரிசோதித்த பின்னர் ஓய்வூதியம் கொடுப்பனவு செய்வதற்கும் உயிருடன் உள்ள ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாத்திரம் ஓய்வூதியத்தை கொடுப்பனவு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் ஏனைய காரணங்களின் பேரில் ரூபா 7,404,625 என்ற வகையில் கொழும்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களுக்குரிய அதிகார பிரதேசத்தில் ஓய்வு பெற்றோருக்கு முறையற்ற வகையில் ஓய்வூதியம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 210 ஓய்வூதியம் பெறுபவருக்கு அவ்வாறு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ஓய்வூதியத்தின் பெறுமதி ரூபா 19,176,950 ஆக இருந்தது. | | எடுத்தல் மற்றும் கூடுதலான கொடுப்பனவை மீள அளவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | கொழும்பு தெஹிவள, கொலன்னாவ மற்றும் கெஸ்பவ ஆகிய பிரதேச செயலகங்களை நடாத்திச் செல்லப்படும் காணிகளின் உரித்து அப்பிரதேச செயலகங்களிடம் இல்லாமல் இருந்ததுடன் அவற்றின் உரித்தினைக் கையேற்பதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | கொழும்பு பிரதேச செயலகத்துக்குரிய காணி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இனங்காணப்பட்டுள்ளதாகவும் கெஸ்பவ பிரதேச செயலகம் அமைந்துள்ள காணி உள்நாட்டு அலுவலக அமைச்சுக்கு கையளிப்பதற்காக மேல் மாகாண சபை காணி ஆணையாளரால் பரிந்துரைக்கப் பட்டுள்ளதாகவும் கொலன்னாவ பிரதேச செயலககத்தின் காணி, பிரதேச செயலகத்தை அமைப்பதற்காக கையளிக்கப்பட்ட காணியாக இருப்பதால் காணி கையேற்கப்பட்ட நோக்கம் தவிர வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்த முடியாதது என்பதால் தற்போது அதில் உள்ள அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளை எடுத்து வருவதாக<br><br>தெஹிவள பிரதேச செயலகம் அமைந்துள்ள காணியில் சிக்கலற்ற உரித்தை அரசாங்கத்திற்காக தெஹிவள பிரதேச | காணிகளின் சிக்கலற்ற உரித்தினை பெற்றுக் கொண்டு கையேற்பதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் தெஹிவள கல்கிஸ்ஸ மாநகர சபையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பழைய மற்றும் தெளிவற்ற உறுதி காரணமாக நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் காணியின் சட்ட ரீதியான உரித்து தெஹிவள கல்கிஸஸ நகர சபைக்கு சொந்தமானதாக | |
| (இ) | 2016 ஜுன் 21 ஆந் திகதிய CO/PDK/2010/679 ஆம் இலக்க வீதிக்கோடு தயாரிக்கப்பட்டுள்ள பாதுக்க பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் மினிமரு ஒதுக்குக் காட்டில் அரசின் காணி கட்டளை சட்டத்தின் காணிக் கட்டளை 228 இன' பிரகாரம் பொது ஒதுக்கு வேறாகவும் ஆட்கள் உடைமை கொண்டிருக்கும் பகுதிகளை வேறாகவும் குறிப்பிடும் வீதிக்கோட்டை தயாரிப்பதற்காக 2016/26 அளவீட்டு வேண்டுகோள் அளவை அத்தியட்சகர் (கொழும்பு) அவர்களுக்கு அனுப்ப வைக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த அளவீட்டு வேண்டுகோளுக்காக 2019 மார்ச் 23, 2020 மார்ச் 13 ஆம் திகதி மற்றும் 2020 திசெம்பர் 02 ஆம் திகதி நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டு இருந்த போதும் இதுவரை வீதிக் கோடுகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கவில்லை. | பாதுக்க பிரதேச செயலக பிரிவின் மினிமருதொல காட்டின் காணிக்காக வீதிக் கோடுகளைத் தயாரிப்பதற்காக 2016/26 அளவீட்டு வேண்டுகோள் மாவட்ட அளவை அத்தியட்சகர் அவர்களுக்கு குறித்த அளவீட்டு வேண்டு கோளுக்காக 2020.12.02 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்ட நினைவூட்டல் கடிதத்தின் பிரகாரம் அந் நிறுவனத்தினால் இந்த அளவீட்டு வேண்டுகோள் நில அளவை அத்தியட்சகர் ஹோமாகம அவர்களுக்கு 2021.01.08 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அளவீட்டு செயற்பாடுகள் மேற்கொண்ட பின்னர் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக | பிரதேச செயலகத்தினால் போதியளவு கடிதங்கள் சமர்ப்பிக் கப்பட்டிருந்த போதும் குறித்த செயற்பாடு இடம் பெறாததால் மாவட்ட செயலாளரின் நேரடி ஈடுபாட்டுடன் நில அளவையாளர் நாயகத்துக்கு அறிவித்து உரித்த செயற்பாடுகளை நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஈ) | கொட்டபோடவத்தவில் அமைந்துள்ள அரசின் உத்தியோகபூர்வ விடுதிக்குரிய வாடகை வருமானம் நீண்ட காலமாக அறவிடப்பாதிருந்ததுடன் நீதிமன்ற கட்டளையின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கு இணக்கப்பாட்டின் போது வழங்கப்பட்ட மாணிக்காவத்த காணிக்காக மாற்றுகாணி ஒன்று தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சீதாவக்க பிரதேச செயலாளருக்கும் | உத்தியோகபுர்வ விடுதிகளில் குடியிருக்கும் வாடகைகாரர்கள தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைளை எடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | அந்த வழக்கின் இணக்க செயற்பாட்டை முன்கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக வீடமைப்பு அதிகார சபையில் பணிப்பான சபை தீர்மானத்தை மிக விரைவில் பெற்றுக் கொள்வதற்கும் அதனை செயல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோாங்க்கங்களினை அடைந்து கொண்டுள்ளதாக 2022 வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களினை அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகையின் கீழ் 31 பிரிவுகளுக்கான 14 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் கீழ் 225 குறிகாட்டிகளில் முன்னேற்றத்தினை காட்டப்பட்டிருந்தது. அவற்றுள் 54 குறிகாட்டிகளில் முன்னேற்றம் நூற்றுக்கு 50 சதவீதத்திற்கும் குறைவான பெறுமதியில் காணப்பட்டன. | செயன் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தது. | நிலைபேறான அபிவிருத்திக்கான நோக்கங்கள் மற்றும் இலக்குகளினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு பிரிவிற்குரிய 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளவாறான பதவியணியினர் பிரதான உள்ளக கணக்காய்வாளர், 07 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் ஒருவருடன் கூடியதாக இருந்தது. மீளாய்ண்டில் மாவட்ட செயலகம் மற்றும் 6 பிரதேசங்களில் கணக்காய்வு பரிசோதனைகளுக்குரிய 21 கணக்காய்வு விசாரணைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அது கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட அளவில் 25 சதவீதம் மாத்திரமாகும். மேலும் மீளாய்வாண்டில் 07 பிரதேச செயலகங்களில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 19 தொற்று நிலைமை காரணமாக அரின் வருமானம் குறைவடைந்தமை அந்நியச் செலவாணி சிக்கல்கள் காரணமாக எரிபொருள் இறக்குமதி மட்டுப்படுத்தப் பட்டமை ,எரிபொருள் பயன்பாட்டின் போது சிக்கனமாக நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக 4/2022 பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் ஆலோசனை வழங்குதல் எரிபொருள் வழங்குவதில் சிக்கலான நிலைமை காரணமாக பொது மற்றும் தனியார் சேவை முறைப்படி செயற்படாமை, அரசாங்க உத்தியோகத்தர்கள் சேவைக்காக அறிக்கை இடும்போது சிக்கல்களுக்கு முகங் கொடுத்தமை, அரச உத்தியோகத்தர்களை கடமைக்கு அழைக்கும் போது மட்டுப்படுத்தப்பட்டமை போன்றவற்றால் இலக்கை நோக்கி செல்ல முடியாதிருந்ததாக | கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் எதிர்பார்த்த வகையில் அதனை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தால் முறைப்படி அதில் திருத்தங்களை மேற்கொண்டு அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட புதவியணியினர் 1423, உண்மையான புதவியணியினர் 1571, ஆகவும் வெற்றிடங் களுக்கான பதவியணியினர் 282 மற்றும் மேலதிக பதவியணியினர் 430 ஆகவும் காணப்பட்டன. | தொழிலற்ற பட்டதாரிகளை தொழிலில் அமர்த்தும் வேலைத்தை திட்டத்தின் கீழ் ஆட்சேர்க்கப்பட்டு இருந்த அரச நிறுவனங்களில் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த | தற்போதுள்ள பணிக்குழாமினை தொடர்ந்தும் செயற்திறன்மிக்க சேவையினை பெற்றுக் கொடுப்பதற்கு |

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 107 ஆன போதிலும் அச்சேவையில் உள்ளவாறான பதவியணியினர் 537 ஆக இருந்தமையால் மேலதிக பதவியணியினர் 430 ஆகும். வெற்றிடங்களான பதவியணியில் அரச முகாமைத்துவ சேவையின் 98 வெற்றிடங்கள் மற்றும் கிராம சேவகர் உத்தியோகத்தர் களுக்கான பதவிகளில் 98 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்ட மையினால் அது மக்களுக்கு வழங்கப்படும் சேவையின் செயற்திறன் மற்றும் வினைத்திறனிக்கு மோசமான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நிரந்தர சேவையில் ஈடுபடுத்துவுதற்கு அமைச்சரவை அங்கீகாரத்துடன் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரமும் கிடைத்துள்ளதுடன் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் பின்னர் எந்த உத்தியோதரையும் மிகை உத்தியோகத்தராக கருதி நடவடிக்கை எடுக்காமல் நிறுவனத்திற்கு இணைக்கப்பட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர் களுக்கும் கடமையை பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுத்த காரணத்தினால் 430 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிகையொனறு ஏற்பட்டது.

கிராம சேவையாளர்களை ஆட்சேர்ப்பு போட்டி பரிட்சை 2021.05.27 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதும் கொவிட் தோற்று நோய் காரணமாக பரீட்சைகளை பிற்போடுவதற்கு நேர்ந்தமை. எவ்வாறாயினும் இவ்வெற்றிடங்கள் தொடர்பாக பணி நிறைவேற்றுதல் அல்லது பதில் கடமை நியமனங்கள் வழங்குவதன் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

போதுமானதாக இருப்பின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்தம் செய்வதற்கும் இல்லாவிட்டால் குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.